**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6**

**ஆகஸ்ட் 2022 – பத்தாம் வகுப்பு துணைத்தேர்வு**

**தனித் தேர்வர்கள் தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகளை இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்தல் / அறிவியல் பாட செய்முறைத் தேர்வில் கலந்து கொள்ளுதல்**

## செய்திக்குறிப்பு

நடைபெறவுள்ள ஆகஸ்ட் 2022 பத்தாம் வகுப்பு துணைத் தேர்வெழுத அரசுத் தேர்வுத் துறையால் அறிவிக்கப்பட்ட நாட்களில் விண்ணப்பித்த அனைத்து தனித்தேர்வர்களும் (தட்கல் உட்பட) 22.07.2022 **(வெள்ளிக்கிழமை) பிற்பகல் 12.00 மணி முதல்** www.dge.tn.gov.in என்ற இணையதளம் வழியாக தேர்வுக் கூட அனுமதிச் சீட்டுகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று **SSLC AUGUST 2022 SUPPLEMENTARY EXAMINATION – HALL TICKET DOWNLOAD"** என்ற வாசகத்தினை **"Click"** செய்ய வேண்டும். தோன்றும் பக்கத்தில், மே2022 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுத விண்ணப்பித்து வருகை புரியாத / தேர்ச்சிப் பெறாத தேர்வர்கள், தங்களது மே 2022 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்விற்கான தேர்வெண் / விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியினைப் (Date of Birth) பதிவு செய்து தேர்வுக் கூட அனுமதிச் சீட்டினைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

நேரடியாக ஆகஸ்ட் 2022 தேர்விற்கு விண்ணப்பித்தவர்கள், விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியினைப் பதிவு செய்து தேர்வுக்கூட அனுமதிச் சீட்டினைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

அறிவியல் பாட செய்முறைத் தேர்விற்கு விண்ணப்பித்துள்ள தனித் தேர்வர்கள் அந்தந்த மாவட்டக் கல்வி அலுவலர்களால் 26.07.2022 (செவ்வாய் கிழமை) முதல் 28.07.2022 ( வியாழக்கிழமை) வரையிலான நாட்களில் நடத்தப்படும் பத்தாம் வகுப்பு அறிவியல் பாட செய்முறைத் தேர்வெழுத வேண்டும். **மேலும், இத்தேர்வர்கள் தேர்வுக்கு முன்கூட்டியே செய்முறைத் தேர்வு நடத்தப்படவுள்ள பள்ளிகளின் விவரங்களை, சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர்களை நேரில் அணுகி பெற்றுக் கொள்ளுமாறு கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

உரிய தேர்வுக் கூட அனுமதிச் சீட்டின்றி எந்த ஒரு தேர்வரும் தேர்வெழுத அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**ஒம்/-**
**இயக்குநர்**

**சென்னை – 600 006**
**நாள்:** 19.07.2022